**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 338/2024**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.மோகன்தாஸ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமசுவாமி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | ஆளூர் | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 05th, 2025.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாகர்கோவில், சுஸ்ருஷா மருத்துவமனையில் எலும்பு சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.07.2016 ம் தேதி, சுமார் 22.00 மணியளவில் 19 வயது மதிக்கத்தக்க வான்மதி என்ற பெண்மணி அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நான் அவரை பரிசோதனை செய்த போது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

(1). இடது மணிக்கட்டில் ஒரு கூர்மையான ஆயுதத்தினால் வெட்டுப்பட்ட காயம் மற்றும் மணிக்கட்டு பகுதியின் சிறுபகுதி சதையினால் மட்டும் இணைக்கப்பட்டு, இரத்த ஓட்டம் இல்லாத நிலையில், மணிக்கட்டிற்கு கீழ் தொங்கி கொண்டிருந்தது. காயத்தின் வழியே துண்டிக்கப்பட்ட மணிக்கட்டு எலும்பு, இரத்தக்குழாய்கள், உணர்ச்சி நரம்புகள், அசைவு நரம்புகள் காணப்பட்டது.

(2). வலது கை நடுவிரல் நடுபாகத்தின் 1 x 1 x 0.5 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(3). தலையின் இடது காதின் பின்பகுதியில் 5 x 3 x 1 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(4). தோள்பட்டையின் இடதுபுறம் பின்பகுதியில் 3 x 2 x 1 cm அளவில் வெட்டுக்காயம் சதை ஆழத்தில் காணப்பட்டது.

(5). இடதுபுற தோள்பட்டையின் பின்புறம் 3 x 2 x 1 cm அளவில் வெட்டுக்காயம் சதை ஆழத்தில் காணப்பட்டது.

(6). தோள்பட்டையின் வலதுபுறம் 1 x 1 x 0.5 cm அளவில் வெட்டுக்காயம் சதை ஆழத்தில் காணப்பட்டது.

அவருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டதில், இடது மணிக்கட்டின் எலும்புகள் உடைந்திருந்தது உறுதி செய்யப்பட்டு, மேற்படி காயங்கள் 1 மற்றும் 6 காயங்கள் கொடுங்காயம் என்றும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து கூறி காயச்சான்றுகள் வழங்கினேன்.

(வழக்கு கோப்பில் காயச்சான்று இல்லை என்பதினால், முதல்விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது.)

சாட்சி நாகர்கோவில் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. D.Sahayarani, Typist, முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில் நீதிமன்றத்தில் இந்த திறந்த நீதிமன்றத்தில் 1மௌதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J
CHRISTAL BABITHA
Date: 2025.11.05
15:20:45 +0530